பக்கங்கள் 12

விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 186

புதன்கிழமை 31 மே 2023

வைகாசி 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# இன, மத பிளவுகளுக்கு அரசு இடமளிக்காதாம்!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, மே 31

மக்கள் மத்தியில் இன, மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்தி அமைதியையும் சமாதானத்தையும் சீர்குலைப்பதற்கு அரசாங்கம் இனியொரு போதும் இடமளிக்காது என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

»11

# இன, மதவாதங்களுக்கு எப்போது முற்றுப்புள்ளி?

## பௌத்தமதம் அழிக்கப்படுவதாக அச்சப்படுகிறாராம் ஞானசாரதேரர்



கொழும்பு, மே 31

இனவாத, மதவாதப் பிரச்சினைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும்? என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். பௌத்த மதம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது என்றும் அவர் »11

# எரிபொருள் நிலையத்தில் மீண்டும் வரிசைகள்!

யாழ்., மே 31

வடக்கு மாகாணத்தில் சில எரிபொருள் நிரப்பு »11

# எரிபொருள் விலை குறைய வாய்ப்பு?

கொழும்பு, மே 31

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை »11

# வவு. இரட்டைக் கொலை குற்றவாளிக்குத் தூக்கு!

வவுனியா, மே 31

நகைகளைக் கொள்ளையிடும் நோக்கத்துக்காக இருவரைக் கொலை செய்த குற்றவாளிக்கு »11

# இரத்த வாந்தியெடுத்த இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 31

இரத்த வாந்தியெடுத்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

»11

## நெல்சிப் திட்ட முறைகேடு

# 8 ஆண்டுகளின் பின் குற்றச்சாட்டுப்பத்திரம்

யாழ்ப்பாணம், மே 31

2012 - 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வடக்கில் முன்னெடுக்கப்பட்ட நெல்சிப் திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் 2015ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்களின் அறிக்கையின் அடிப்படையில் வடக்கிலுள்ள இரு அதிகாரிகளுக்கு »11







noolaham.org | aavanaham.org

சட்டவிரோத மணல் அகழ்வால்

# புலோப்பளை கிராமத்துக்குள் கடல் நீர் உட்புகும் அபாயம்!

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**கிளிநொச்சி, மே 31**

**பளைப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ளது என்றும், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



புலோப்பளையில் சட்டவிரோத மணல் அகழ்வு தினமும் நடைபெறுகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ள மக்கள், இதனால் கிராமமே வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வால் கடல் நீர் கிராமத்துக்குள் புகும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும், இது தொடர்பில் பொலிஸாரோ ஏனைய அதிகாரிகளோ எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்றும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றும் பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

## 3 மாதங்களாக வராத மின்கட்டணப் பட்டியல்

பளை, மே 31

மூன்று மாதங்களாக மின் கட்டணப் பட்டியல் வழங்கப்படவில்லை என்று பளை, இந்திராபுரம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரே நேரத்தில் பெரும் தொகைப் பணத்தைச் செலுத்த வேண்டிய இக்கட்டு நிலைமை ஏற்படலாம் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தங்களுக்குக் கடந்த பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி மின் கட்டணப் பட்டியல் வழங்கப்பட்டது என்றும், அதன் பின்னர் மின்கட்டணப் பட்டியல் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-9)

## முத்திரை இடப்படாத தராசுகள்; ஐவருக்கு எதிராக நடவடிக்கை!

யாழ்ப்பாணம், மே 31

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்திய 5 வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு உத்தியோகத்தர்களால் நேற்றுமுன்தினம் சுன்னாகம், அச்சுவேலியில் உள்ள பல வியாபார மையங்களில் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வியாபாரிகளால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளைச் சோதனை செய்தபோது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்திய 5 வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

நிறுவை அல்லது அளவை, நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை வியாபார நோக்கத்துக்காகப் பயன்படுத்தும் வியாபார நிலையங்களில் தொடர்ந்தும் சோதனை முன்னெடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-26)



கட்டுப்பாட்டை இழந்த இ.போ.ச. பஸ் வீதியோரத்தில் இருந்த பாதுகாப்புக் கற்களை மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி ஏ-9 வீதியில் திரேசம்மாள் கோயில் அருகில் நடந்துள்ளது. (எ-113)

## கஞ்சாவுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 31

காரைநகரில் 7 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் காரைநகர் மல்லிகைப் பகுதியில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. அதன் போது 7 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன், 34 மற்றும் 38 வயதுடைய இருவர் இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் மாலை ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (எ-125)

உடையார்கட்டிலுள்ள

## வெள்ளப்பள்ளம் குளம் தனிநபரால் ஆக்கிரமிப்பு

### மக்கள் எதிர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, மே 31

புதுக்குடியிருப்பு - உடையார்கட்டு கமநல சேவைக்குட்பட்ட வெள்ளப்பள்ளம் குளத்தை தனிநபர் ஒருவர் ஆக்கிரமித்து எல்லைவேலி போட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராமமக்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பதாகைகளை ஏந்தியவாறு புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகம் சென்ற கிராமமக்கள், பிரதேசசெயலகம் முன்பாக எதிர்ப்பை வெளியிட்டு பிரதேசசெயலாளர் எஸ்.ஜெயகாந்திடம் மனுவொன்றையும் கையளித்தனர்.

இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

உடையார்கட்டு கமநலசேவைத் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட குளமாக வெள்ளப்பள்ளம் குளம் காணப்படுகிறது.



இந்தக் குளத்தின்கீழ் கால்நடைகளுக்கு மேய்ச்சல், குடிதண்ணீர், மீன்பிடித்தொழில், மேட்டுநிலப் பயிர்ச்செய்கை என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குளத்தின் அருகிலுள்ள காணிகளில் நெல்விதைப்பும் காலபோகத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிலையில் இந்தக் குளத்தை தனிநபர் ஒருவர் அபகரித்து எல்லை வேலி அமைத்து ஆக்கிரமித்துள்ளார்.

அதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை உடன் தடைசெய்ய வேண்டும் - என்றனர்.

இதுகுறித்து பிரதேசசெயலாளரிடம் கேட்டபோது.

குளம் அமைந்துள்ள காணி தனியார் காணியாகக் காணப்படுகிறது. குளத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு விவசாயத் திணைக்களத்திடம் இருக்கின்றது. இது தொடர்பில் மாவட்டச் செயலரின் கவனத்துக்குக் கொண்டு சென்று தீர்வு எட்டப்படும் - என்றார். (ச-19)



## குப்பைத் தொட்டியை திருடிய விசமிகள்!

கொடிகாமம், மே 31

கொடிகாமத்தில் ஏ-9 வீதியில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டிகள் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் கொடிகாமம் நாவலடிச் சந்தியில் நடந்துள்ளது. (எ-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தசாசனத்தைக் கருவியாக்கி அதிகாரத்துக்கு வரத் திட்டம்!

## எச்சரிக்கின்றார் சம்பிக்க

**கொழும்பு, மே 31**

**நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்கள் ஒட்டுமொத்த மக்களிடமும் மன்னிப்புக் கோரவேண்டும். கோத்தாபய ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டு வரப் புத்த சாசனத்தை ஒரு கருவியாகப் பயன் படுத்தியவர்கள் தற்போது மீண்டும் களமிறங்கியுள்ளார்கள். நாட்டு மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்.**

இவ்வாறு ஐக்கிய குடியரசு முன் னணியின் தலைவரும், நாடா ளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

புத்தசாசனம் மற்றும் பௌத்த மதத்தை இலக்காகக் கொண்டு வெறுக்கத்தக்க பேச்சுக்கள் தற்போது தீவிரமடைந்துள்ளன. கருத்துச் சுதந்திரத்தை அடிப் படை மனித உரிமைகளுக்குள் வரையறுத்துக் கொண்டால் எந்தப் பிரச்சினைகளும் தோற் றம் பெறாது. அரசமைப்பால் கருத்து மற்றும் பேச்சுச் சுதந் திரம் வழங்கப்பட்டுள்ளது என் பதற்காக விரும்பிய அனைத் தையும் பேசமுடியாது.

2019 ஆம் ஆண்டு கோத்தா பய ராஜபக்ச உட்பட ராஜபக்சக் களை ஆட்சிக்குக் கொண்டு வரப் புத்தசாசனம் மற்றும் பௌத்த மதம் பிரதான கருவி யாகப் பயன்படுத்தப்பட்டது. பௌத்த மதத்துக்குப் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த ராஜபக்சக் கள் ஒட்டுமொத்த மக்களின் வாழ்வாதாரத்தையும் இல்லா தொழித்தனர். தற்போது மீண் டும் களமிறங்கியுள்ளார்கள். நாட்டு மக்கள் அவதானத்து டன் செயற்படவேண்டும்- என் றார்.(ஏ-இ)

# தேர்தலுக்கு ஐ.ம.சக்தி தயாராம்!

கொழும்பு, மே 31

எந்தத் தேர்தலை அரசாங்கம் நடத்தினாலும் நாங்கள் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரி வித்துள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் தயார். சிலவேளை ஜனாதிபதி தேர்த லை நடத்துவதாக கூறி வேறு தேர் தலையும் நடத்துவதற்கு வாய்ப் புண்டு.

ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரம் எமக்கு நன்றாகத் தெரியும்.

உரிய நேரத்தில்தான் ஜனாதிப தித் தேர்தல் வரும். அதற்கு முன் வேறு தேர்தலை நடத்துவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம். ஆயினும் எந்தத் தேர்தலுக்கும் நாம் தயார்- என்றார். (ச-22)

# நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்குவதற்கு அனுமதி

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 31

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப் பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித் துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றபோது அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சரு மான பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்

இதுதொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் கூறியதாவது:

இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பதற்கு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி ஆகியோர் இணைந்து கூட்டாக அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல் செய்தனர். இதற்கு தென்னாபிரிக்காவின் சர்வதேச தொடர்பு கள் மற்றும் ஒத்துழைப்பு மற்றும் அந்நாட்டு அரச பிரதானி களின் ஆலோசனைகள் பெறப்பட்டன.

அதற்கமைய தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் ஒரு மைப்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு எமது நாட்டில் உண்மை மற்றும் ஒருமைப்பாட்டு பொறிமுறையை அமைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத் துக்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது- என்றார். (ச44)

# நடாஷாவுக்கு எதிராகப் பொங்கும் வீரசேகர

கொழும்பு, மே 31

பௌத்த மதத்துக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்ட நகைச்சுவைக் கலைஞர் நடாஷா எதி ரிசூரியவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண் டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

அரசமைப்பின் 9ஆவது பிரிவின் கீழும் இலங் கையின் தண்டனைச் சட்டத்தின் கீழும் நடாசா வுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உரிய நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் ஏற்ப டக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகக் கரிசனை கொள்ளவேண்டும். பௌத்தம் அவமதிக்கப்படும் வேளைகளில் அதற்குத் தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை இந்த நாட்டின் பெரும்பான்மை பௌத்தர்களின் உணர்வுகள் வெளிப்படுத்தி யுள்ளன.

அரசமைப்பின் ஏற்பாடுகளும் தண்டனைச் சட்டமும் பௌத்தம் அவமதிக்கப்படும்வேளை அதற்கு எதிரான விதத்தில் நடவடிக்கை எடுப்ப தற்கான வழிவகைகளைக் கொண்டுள்ளன. எதிர்விளைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அவற்றை உரிய முறையில் பயன்படுத்தவேண் டும். அரகலய போன்ற சூழ்நிலைகளில் பௌத் தம் அவமதிக்கப்பட்டமை பெரும் கவலையை ஏற்படுத்துகின்றது. அரகலயவில் கறுப்புப் பேப் பரில் வெசாக்கூடுகள் காட்சிப்படுத்தப்பட்டன.

சர்வதேச சக்திகள் அரகலயவை திட்டமிட்டதும் இடதுசாரிகளுடனான அவர்களின் தொடர்புகளும் இலங்கையின் பௌத்த பாரம்பரியம் பௌத்தர்கள் மத்தியிலான ஐக்கியம் தொடர்பான அவர்களின் நோக்கம் குறித்துக் கேள்வியை எழுப்பியுள்ளன. அனைத்து சமூகங்களினதும் கலாசாரத்தையும் பேணுவது அவசியமானது- என்றார். (ஏ-இ)




**தீவுப்பகுதியில ஒரு பெடியன் ரத்த வாந்தி எடுத்து அநியாயமாச் செத்துப்போனதை இண்டைக்கு செய்தியளில பாத்து அறிஞ் சிருப்பியள். முந்தி எண்டால் இப்பிடி ஆரும் ரத்தம் கக்கிச் செத்தால் பே, பிசாசு அடிச்சிட்டு தெண்டு சொல்லுவினம். இப்ப அந்தப் பெடியன் ரத்தவாந்தி எடுத்ததுக்கும் கார ணம் பேய் அடிச்சுத்தான். ஆனால் இந்தப் பேய்க்குப் பேர் கசிப்பு.**

**தீவுப்பகுதியளில இப்ப கொஞ்சக்காலமா கசிப்புப் பாவனை கூடித்தான் போச்சுது. ஆனால் இந்தக் கசிப்பு வெளியிடங்களில இருந்து காய்ச்சுப்பட்டுத்தான் தீவுப்பகுதிக் குள்ள கொண்டந்து விக்கினம். அதுவும் வன்னிப்பக்கத்தில இருந்துதான் தீவுப் பக்கத்துக்கு கசிப்பு இறக்குமதி அமோகமா நடக்குதாம். நாட்டில அரசாங்கமே இப்ப தான் மெல்லமெல்ல இறக்குமதிப் பொருள் களுக்குத் தடையை விலத்திக் கொண்டு வருகுது. ஆனால் நாடு சுடுகாடா மாறினா லும் கூட, தீவுப்பகுதிக்குள்ள கசிப்பை இறக்குமதி செய்யிறதுக்கு மட்டும் தடையே இல்லையாம். குறிப்பா புங்குடுதீவில தான் இந்தக் கசிப்பு பிஸ்னஸ் கொடிகட்டிப் பறக் குது. புங்குடுதீவுக்கு கசிப்பைக் கொண்டு வாறதெண்டால் ஒரேயொரு பாதைதான் இருக்கு. யாழ்ப்பாணம் பண்ணையால வந்து வேலணை வழியால, புங்குடுதீவுப் பாலத்தை தாண்டித்தான் உந்தக் கசிப்பு போத்தல் போத்தலா வந்திறங்குதாம்.**

**அப்பிடி கசிப்பை இறக்குமதி செய்யிற ஆக் களையும் சனத்துக்கு தெரியும். அவையைப் பற்றி பொலிஸில போய் முறைப்பாடு குடுத் தாலும், அதையெல்லாம் ஒரு முறைப்பாடா பொலிஸ் எடுக்கிறதேயில்லை. முறைப்பாடு குடுக்கப் போறவையைத்தான் பொலிஸ் காரர் முறைச்சுப்பாப்பினமாம். கனதரம் கரைச்சல் குடுத்தால் ஒப்புக்கு ரண்டு, மூண்டுபேரை பிடிச்சிட்டு மூண்டாம் நாளே அவையைள வெளியில விட்டிடுவினம். அப்பிடி வந்தவை சும்மாவோ இருப்பினம். மூண்டுநாள் பிஸ்னஸையும் ஈடுகட்டுற மாதிரி அள்ளுகொள்ளையா கசிப்பை இறக்குமதி செய்து, தீவெல்லாம் இறைப் பினமாம். சனத்துக்கு காவலுக்கு நிக்க வேண்டியவையே கசிப்புக்கு காவலுக்கு நிக்கிறதாலதான் தீவுப்பகுதியில இளம் பெடியள் எல்லாம் கசிப்புக்கு அடிமையாகி, இப்பிடி ரத்தம் கக்கிச் சாகிற அவலமெல் லாம் நடக்குது. இப்பிடிக் கசிப்புக்குக் காவல் காக்கிற காக்கிப் பூனைய ளுக்கு ஆர்தான் மணி கட்டப் போகினமோ?**



- பசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், றோட்டேரியனும் ஆகிய **கப்டன் சோமசுந்தரத்தின்** பாசமிகு மகன் **சோமசுந்தரம் சுரேஸ்** காலமானதையிட்டு ஆழ்ந்த மனவருத்தம் அடைவதுடன், அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**றோட்டேரியன் கனகரத்தினம் சுரேந்திரன்**
**குடும்பத்தினரும், நண்பர்களும்.**

## கண்ணீர் அஞ்சலி



Dr.T.Hamlet (Dental Surgeon)
அவர்களின்
பாசமிகு தந்தையார்
**செபஸ்தியாம்பிள்ளை திருச்செல்வம்**
அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் வைத்தியர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 07.12.1938 — மறைவு 28.05.2023

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

மண்ணில் 02 • 02 • 1946



விண்ணில் 30 • 05 • 2023

### ஆறுமுகம் ஞானக்கொழுந்து

**(ஓய்வுபெற்ற ஊழியர் இலங்கை தொலைத் தொடர்பு சேவை)**

கந்தரோடையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஞானக்கொழுந்து நேற்று (30.05.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்றவர்களான ஆறுமுகம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலம்சென்றவர்களான மாணிக்கம் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், திலக மணியின் பாசமிகு கணவரும், தர்சன், மாதங்கி ஆகியோரின் அன்பு தந்தையும், தயாளன், ஜெயகாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹவிஷ்னாவின் பாசமிகு பேரனும், காலம்சென்ற சபாநாயகம், விநாயகோஷ்ட்டி, லட்சுமிகாந்தன், காலம்சென்ற கெஞ்சிதபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராமசந்திரன், காலம்சென்ற சண்முகநாதன், காலம்சென்ற ரட்ணசிங்கம், பத்மநாதன், செல்வராசா, காலம்சென்ற சிவமணி, மோகனா ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (31.05.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 25100) A-1

**தகவல்: குடும்பத்தினர்.**

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 09 (பழைய வட்டாரம் 16) கஸ்தூரியார் வீதி, ஆதன இல 464 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நடராஜா பெண் கமலாதேவி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு கந்தையா இராமலிங்கம் கைம்பெண் செல்லமுத்து அவர்கள் 31.08.1957ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ. அருளம்பலம் முகதாவில் 625ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு கந்தையா இராமலிங்கம் நடராசா பெண் கமலாதேவிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், பிறவுன் வீதி 2ம் ஒழுங்கை, இல.19 கந்தையா இராமலிங்கம் அவர்கள் 09.07.1981ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சண்முகநாதன் முகதாவில் 570ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இல. 192, சரவணமுத்து நடராசா மகள் கமலாதேவிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், வேலணை மேற்கு, வேலணை, தற்பொழுது யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இல. 192, கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கமும் பெண் கமலாதேவியும் ஆகிய அவர்கள் 05.04.1994ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி. ச. இளங்கோவன் முகதாவில் 3540ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இல.192, இராசையா தங்கராஜா கைம்பெண் கமலாதேவிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இல.192, இராசையா தங்கராஜா கைம்பெண் கமலாதேவி அவர்கள் 05.04.1994ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி ச. இளங்கோவன் முகதாவில் 3541ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், வேலணை மேற்கு, வேலணை சதாசிவம் திருநாவுக்கரசு பெண் புட்கலைக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், வேலணை மேற்கு, வேலணை, சதாசிவம் திருநாவுக்கரசு பெண் புட்கலை அவர்கள் 15.11.2005ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ச. நல்லநாதன் முகதாவில் 1008ம் இலக்க அறுதி உறுதி மூலம் அவ்வூரைச்சேர்ந்த சீவரெத்தினம் மகேந்திரனும் பெண் சுசிலாவுக்கும் வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை கல்வராஜன் புலம் நிலப்பரப்பு 2 குளி 6 இது நில அளவையாளர் வி.என். தேவராசா 1994ம் ஆண்டு சித்திரை மாதம் 03 திகதி அளந்து விபரித்த 1145 இலக்க படத்தின்படி 1ம், 2ம் துண்டுகள் நிலப்பரப்பு 3 குளி 00.48 உம் வீடுகளும் கிணறும் இதில் 2ம் துண்டாக காட்டப்பட்ட நிலப்பரப்பு 1 ஒன்று குளி 3.15 மூன்று தசம் ஒன்று ஐந்தும் கிணற்றில் அரைவாசியும் இதற்கு எல்லை

**கிழக்கு** : மிகுதி ஆதனமாகிய 1ம் துண்டு

**வடக்கு** : குழந்தைவேலு சிவப்பிரகாசத்தின் ஆதனம்

**மேற்கு** : கஸ்தூரியார் வீதி

**தெற்கு** : மிகுதி ஆதனமாகிய 1ம் துண்டு இதனடாங்கலும்.


தற்போது சீவரெத்தினம் மகேந்திரனும் பெண் சுசிலாவும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்ததிகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது சீவரெத்தினம் மகேந்திரனும் பெண் சுசிலா என்னும் பெயரிற்குமாற்றம் செய்யநடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr.39936)(N-1)

## மரண அறிவித்தல்

மலர்வு 08 • 08 • 1951



உதிர்வு 30 • 05 • 2023

### நாகலிங்கம் மகாலிங்கம்

**(நெடுங்கேணி லிங்கம் ஸ்டோர்ஸ்)**

காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும் நெடுங்கேணி லிங்கம் ஸ்டோர்ஸ் வர்த்தகரும் வவுனியா குருமன்காட்டினை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டவருமான நாகலிங்கம் மகாலிங்கம் அவர்கள் நேற்று (30.05.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (London), சுரேந்திரன் (Vavuniya), சுபாசினி (லண்டன்), நிசாந்தன் (Engineer - Singapore), காயத்திரி (Omegaline-Vavuniya) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரதன், (Engineer - London), சிவதர்சன் (Accountant) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கதிரவனின் (London) அன்பு பேரனாரும், அமரர்களான தர்மலிங்கம், சுந்தரலிங்கம், பாக்கியலட்சுமி மற்றும் ரதிதேவி (Australia), சரோஜினிதேவி (Canada), பத்மஜோதி (London), தனலட்சுமி (London), கமலாம்பிகை (Australia), அமுதலிங்கம் (London) ஆகியோரின் அன்பு சகோதரனும், சுவர்ணதேவி (Canada), விஜயலட்சுமி (Vavuniya), அமரர்களான செல்வராசா, சபாநாயகம், பரமேஸ்வரன் மற்றும் நித்தியானந்தன் (London), சிவராசா (London), சிவபாலன் (Australia), ஜீவா (London) மற்றும் ரவீந்திரன் (Germany), சொர்ணதேவி (Gampola), மோகேந்திரன் (Canada), அமரர் யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரத்தினேஸ்வரி (Germany), அருணகிரிநாதர் (Gampola), தயாளினி (Canada) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது வவுனியா குருமன்காடு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 9487 688** (மகன்)
**076 8087 500** (மனைவி)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25101) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## யாரின் தவறால் நிகழ்கின்றன விபத்துக்கள்?

வடக்கு மாகாணத்தில் இந்த மாதத்தில் மட்டும் 16 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்திருக்கின்றனர். அவர்களில் 10 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயிரிழந்திருக்கின்றனர். இந்த விப்த்து உயிரிழப்புக்கள், வீதி ஒழுங்குகளைச் சரியான முறையில் கடைப்பிடிக்காததால் நடந்துவிட்டன என்று கூறிச் சாதாரணமாகக் கடந்துவிடமுடியாது. வீதி விபத்துக்கள் உயிர் இழப்புக்களையும், மீளமுடியாத அவய இழப்புக்களையும், பொருளாதாரச் சேதங்களையும் ஏற்படுத்திவிடுகின்றன. உள்நாட்டுப் போரால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த விபத்துக்களால் பெரும் எண்ணிக்கையான இளம்வயதினர் உட்படப் பல குடும்பத் தலைவர்கள் உயிரிழப்பது வேதனையானது. வாகனச் சாரதிகளும், பொதுமக்களும் வீதி ஒழுங்குகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை அதனால் விபத்துக்கள் நடக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லைத்தான். ஆனால், மறுபுறத்தில் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலும், ஏனைய இடங்களிலும் விபத்துக்களைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் செயற்பாடுகள் உரிய வகையில் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்பதை ஆராய வேண்டியதும் அவசியமானதாகும்.

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலும், பிரதான வீதிகளிலும் காலை, மதியம், மாலை போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. நகர்ப் பகுதியில் காலையிலும், மதியம் பாடசாலைகள் முடியும் நேரத்திலும், மாலையிலும் கடுமையான நெரிசல் நிலைமையை அவதானிக்க முடிகின்றது. வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், ஆமை வேகத்தில் பயணிக்கும் பேருந்துகள், அவற்றால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் என நகருக்குள் பயணிப்பதே பெரும் வில்லங்கம் என்ற நிலைமையே இருக்கின்றது. ஆஸ்பத்திரி வீதி, பழைய மின்சார நிலைய வீதி, காங்கேசன்துறை வீதி என அனைத்து இடங்களிலும் இந்த நிலையே இருக்கின்றது. இந்தப் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு – சீராக்குவதற்கு – போக்குவரத்துப் பொலிஸார் நகருக்குள் கடமையில் இருப்பதில்லை. நகருக்கு வெளியே வீதியோரங்களிலேயே அவர்கள் அதிகம் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் விபத்துக்களைக் குறைப்பதற்கும் வடக்கு மகாணசபை, யாழ்ப்பாணம் மாநகரசபை போன்றவற்றால் கடந்தகாலங்களில் பல்வேறு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. பேருந்துகள் தொடர்பாகவும் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. கனரக வாகனங்கள் பகல் வேளையில் நகருக்குள் பிரவேசிக்கக் கூடாது என்று கூடத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அவை எவையுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. வெற்றுக்காகிதங்களாக அவை இன்னமும் உறங்கிக்கொண்டிருப்பதால், யமதர்மன் வாகனங்களின் வடிவில் உயிர்களை இலகுவாகப் பறித்தெடுக்க முடிகின்றது. இந்தத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக அசமந்தப் போக்குடன் செயற்படுவதும் கூட விபத்துகளுக்குக் காரணம் என்பதையும் மறுக்கமுடியாது. அவர்கள் சரியான முறையில் செயற்பட்டிருந்தால் – செயற்படுத்தியிருந்தால் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட அநியாய உயிரிழப்புக் கூட ஏற்பட்டிருக்காது என்பதே உண்மை.

கூட்டங்களைக் கூட்டி மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தைப் பேசிக் கொண்டிருப்பதால் எதுவும் நடந்து விடப் போவதில்லை. தீர்மானிக்கப்பட்ட விடயங்களை இறுக்கமுடன் நடைமுறைப்படுத்த அதிகாரிகள் முன்வர வேண்டும். யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த இதுவரை எடுக்கப்பட்ட தீர்மானங்களை எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றி நடைமுறைப்படுத்த வேண்டும். பொலிஸார் தங்களுக்கு 'வசதியான' இடங்களைத் தெரிவு செய்து கடமையில் ஈடுபடுவதைத் தவிர்த்து, எங்கு அவர்களின் சேவைக்கு தேவை இருக்கின்றதோ அங்கு கடமையில் ஈடுபடவேண்டும். அவர்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் இது விடயத்தில் அவதானம் செலுத்தவேண்டும்.

போக்குவரத்து நெரிசல் அதிகமான தற்காலத்தில் அதீத அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்துவது அவசியம். ஒரு நகர வீதியில் நாம் மட்டுமே பயணிப்பது இல்லை. ஒரு சமூகம், நாட்டின் எதிர்காலச் சந்ததி எனப் பல்வேறுபட்ட தனி உடல்கள் பயணிக்கின்றன. ஒரு சாரதியின் அல்லது ஒரு பாதசாரியின் கவனக்குறைவு – ஒரு மனிதனின் வாழ்க்கையை – ஒரு குடும்பத்தின் வாழ்க்கையை ஒரு நொடியில் மாற்றி விடும். இதை உணர்ந்து பொதுமக்களும் வீதி விபத்துத் தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியம்.

நாளொரு நல்வார்த்தை

" நீங்கள் சூரியனைப்போல பிரகாசிக்க விரும்பினால், முதலில் சூரியனைப் போல கொழுந்து விட்டு எரியவேண்டும்"

– அப்துல் கலாம்




# நாட்டின் உணவுப் பாதுகாப்பு ஒப்பீட்டளவில் முன்னேற்றம்!

**கொழும்பு, மே 31**

**இலங்கையில் உணவுப் பாதுகாப்பு அனைத்து மாகாணங்களிலும் மேம்பட்டு வருகின்றது என்று ஐக்கிய நாடுகளின் உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் விவசாய அமைப்பு என்பன தெரிவித்துள்ளன. ஆயினும் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை உயர்ந்த அளவில் காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

2023 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டுப் பணி அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.9 மில்லியன் மக்கள் அல்லது மக்கள் தொகையில் 17 சதவீதம் பேர் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். இது கடந்த ஆண்டு ஜூன், ஜூலையில் இருந்ததைக் காட்டிலும் 40 சதவீதம் குறைந்துள்ளது.

உணவுப் பொருள்களின் விலை குறைப்பு மற்றும் அறுவடைக் காலத்தில் விவசாய சமூகங்களிடையே மேம்பட்ட வருமானம் ஆகியவை உணவுப் பாதுகாப்பின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

முன்னேற்றம் உள்ளபோதும், சில மாவட்டங்களில் பிரதானமாக கிளிநொச்சி, நுவரெலியா, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்றவற்றில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகமாகவே உள்ளது.

பெருந்தோட்டத்துறையின் சமூகங்களுக்குள்ளும், அன்றாடக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் சமுர்த்தி போன்ற சமூக உதவித் திட்டங்களிலும் தங்கியுள்ள குடும்பங்கள் மத்தியிலும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை மிக உயர்ந்த அளவில் காணப்படுகின்றது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2022, 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டு பிரதான பயிர் பருவங்களில் அரிசி மற்றும் மக்காச்சோளம் உள்ளிட்ட தானியங்களின் உற்பத்தி 4.1 மில்லியன் தொன்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஐந்தாண்டு சராசரியை விட 14 சதவீதம் குறைவாகும். (எ-இ)

# கிடப்பில் போடப்பட்டுள்ள ஆணைக்குழு உருவாக்கம்

## ஜனாதிபதியிடம் முறைப்பாடு

21 ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் புதிய சுயாதீன ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படவேண்டும். ஆனால் இதுவரையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை அரசமைப்புப் பேரவை நியமிக்காதுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குப் புதிதாக பரிந்துரைக்கப்பட்டுள்ள பெயர்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகளும் பல்வேறு இழுத்தடிப்புகளைச் செய்கின்றன.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதியிடமிருந்து நீக்கப்பட்டு, அந்த அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கியதன் நோக்கம் ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை மற்றும் செயற்றிறன் ஆகியவை மேம்படவேண்டும் என்பதற்காகவே. ஆனால் அந்த நோக்கம் தற்போது மழுங்கடிக்கப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

**நாளை**

**01.06.2023**

வியாழக்கிழமை

வைகாசி 18

சுபநேரம் : 07.22 - 08.52

ராகுகாலம் : 01.22 - 02.52

பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. -வள்ளுவர்

"சிறு முதலீட்டில் அதிகம் சம்பாதிக்கலாம் என வருபவர்களிடம் அவதானமாக இருக்கவும். அவர்கள் பெரும்பாலும் தான் அறிந்ததை கூறாமல் நயவஞ்சகமாக மயக்கி திட்டத்தில் இணைத்துவிடுவதை நோக்கமாகக் கொண்டவர்கள். இறுதியில் பண இழப்பு மட்டுமன்றி சட்டத்தின் முன் குற்றவாளியாகவும் இருக்க நேரிடும். சந்தை விலைக்கு முரணான விலையில் பொருள் விற்பனை, சலுகைகள்,
புதிய விற்பனையாளரை இணைப்பதற்கு வெகுமதிகள் என காட்டப்படும் திட்டங்களில் இணைய வேண்டாம். கீழ்நிலை எண்ணிக்கை அதிகரிக்க உங்கள் முதலீடு பலமடங்காகும் எனக் கோரும், வர்த்தக வாய்ப்பு, பகுதி நேர வேலைவாய்ப்பில் பல் ஆயிரங்களில் வருமானம், இல்லத்தரசிகளுக்கான அரிய வாய்ப்பு போன்ற பதாகைகளை கொண்ட திட்டங்களில் இணைய முன் மிகுந்த விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

# தலைதூக்கும் பிரமிட் மோசடி

▌சித்ரா



'அதிக வேலைப்பளு இல்லாமல் கை நிறைய சம்பாதிக்கும் முறை ஒன்று உள்ளது இணைகிறீர்களா?' இவ்வாறு யாரும் உங்களை அணுகிய அனுபவம் உண்டா? இந்தக் கேள்வி களுக்குப் பதில் தருமுன் அது இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒன்றான, பிரமிட் திட்டங்களில் ஒன்றா என்பது குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம்.

இலங்கையில் பிரமிட் திட்டங்கள் தடைசெய்யப்பட்டவை என்று எம்மில் எத்தனை பேருக்கு தெரியும்? பலர் தெரிந்தும் சிலர் தெரியாமலும் இந்த வலைக்குள் தினம்தினம் விழுந்து கொண்டு தான் இருக்கிறோம். அனேகமாக இல்லத்தரசிகளையும் பணத்தேவை உடையோரையும் தனது வலைக்குள் இலகுவாக வீழ்த்தி தனது இலக்கு பணம் சேர்ந்ததும் மொத்தப் பணத்தையும் வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடிவிடும் வழக்கம் கொண்டது தான் இந்த பிரமிட் மோசடி.

## பிரமிட் என்பது ஏன்?

ஒரு திட்டத்தில் நாம் குறித்தளவு பணமுதலீடு செய்து இணைந்து அதில் மற்றவர்களை இணைப்பதன் மூலம் ஒரு பங்கு வருமானத்தையும் பெறுவோம், இதில் புதிதாக இணையும் நபரும் குறித்த முதலீட்டினை மேற்கொண்டு அவருக்கு கீழ் மேலும் சிலரை இணைப்பார் இதற்கு அவருக்கும் அவரை இணைத்தவருக்கும் ஒரு விகித வருமானம் கிடைக்கும். முதல் நபர் இருவரைச் சேர்க்க அவர்கள் தலா நால்வரைச் சேர்க்க என காலப்போக்கில் இதன் சங்கிலி வடிவான கட்டமைப்பு வளர்ந்து செல்கின்றது. பிரமிட் வடிவத்தை ஒத்திருப்பதால் இது பிரமிட் திட்டம் என்று அழைக்கப்படுகின்றது.

பிரமிட் திட்டங்களில் இரு வகை உண்டு. ஒன்று பொருள் விற்பனை சார்ந்தது மற்றது ஆள்சேர்ப்பு முறை சார்ந்தது. பொருள் விற்பனை சார்ந்த முறையில் பெரும்பாலும் இணையும் அங்கத்தவர் சகாய விலையில் ஏதேனும் பொருளினை பெற்று இணையவேண்டும். இதன் மூலம் அவருக்கு பொருள்களை ஏனையவர்களுக்கு விற்கும் உரிமையும் புதிதாக அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் உரிமையும் கிடைக்கும்.

ஆள்சேர்ப்பு முறையில் இணைபவர் முதலில் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை முதலீடு செய்து இணைவார். அவருக்குக் கீழ் இணைபவர்களும் முதலீடு செய்யவேண்டும். பெரும்பாலும் ஒன்லைன் மூல திட்டங்களில் அவர்களுக்கு விளம்பரங்களை பார்வையிடல் போன்ற மிகச்சிறிய பணிகள் தரப்படுகின்றன. அதற்கு ஒரு தொகை ஊதியமும் வழங்கப்படுகின்றது. இந்தத் தொகை விகிதம் அடுத்த கட்டங்களுக்குச் செல்ல அதிகரிக்கின்றது. அடுத்த கட்டத்துக்குச் செல்ல முதலில் அவருக்குக் கீழ் குறித்தளவு அங்கத்தவர்கள் இணைய வேண்டும். பின்னர் அடுத்த முதலீட்டையும் மேற்கொண்டு அடுத்த கட்டத்துக்குச் செல்லலாம். அதன் பின் பிரமிட் அமைப்பில் இவருக்குக் கீழ் அல்லது குழுவில் ஒவ்வொரு அங்கத்தவர் இணையும்போதும் இவருக்கான வருமானம் அதிகரிக்கும்.

## தவறும் தண்டனையும்

பொருளாதார ரீதியான பாதிப்புகளையொட்டி இலங்கையில் இவ்வகை திட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. வங்கிச்சட்டம் 1988ஆம் இலக்க 30 இன் படி 'பணம் அல்லது பணத்துக்குச் சமனான முதலீடுகளை மேற்கொண்டு அங்கத்தவர்கள், மேலதிக அங்கத் தவர்களை இணைத்தல் மற்றும் அங்கத்தவர்களின் பங்களிப்பு பெறுமதியை அதிகரித்தல் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் எந்தவொரு நபரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடங்குதல், வழங்குதல், விளம்பரப்படுத்தல், நிதியளித்தல், நிர்வகித்தல் அல்லது இயக்குதல் போன்றவற்றைச் செய்ய முடியாது என்ற ரீதியில் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை மீறினார் என ஒருவர் நிரூபிக்கப்படுமிடத்து 10 லட்சம் ரூபாவுக்கும் குறைந்த தண்டப்பணமும் மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனையும் வழங்கப்படும்.

அத்துடன் இந்தச் சட்டம் இணைபவரையும் சாரும் என தெரிந்தே இதனை செய்பவர்களுக்கு மூன்று வருடத்துக்கு குறையாத 5 வருடங்களுக்கு மேற்படாத கடுங்காவல் தண்டனையும் 20 லட்சம் ரூபாவுக்கு குறையாத அல்லது அங்கத்தவர்களின் முதலீட்டு மதிப்பீட்டுத் தொகைக்கு இருமடங்கான தொகை இரண்டில் பெரிய தொகையினைச் செலுத்தவேண்டும்.

அத்துடன் மேற்குறித்த சட்ட அத்துமீறலானது 'சட்டவிரோத நடவடிக்கை' என பணமோசடி தடுப்புச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி இவ்வாறான திட்டங்கள் மூலம் வருமானம் ஈட்டியவரின் நிதி, பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதிச் சட்டத்தின் மூலம் பறிமுதல் செய்யப்படும்.

## பணத்தேவைக்கு தீர்வல்ல

பேராசையை தூண்டல், நம்பிக்கையை ஏற்படுத்தல், பாமர மக்களிடையே பண விரக்திக்கு நிவாரணமளித்தல் போன்ற செயற்பாடுகளின் மூலமே இவ்வாறான திட்டங்கள் மக்களிடையே பிரபலம் அடைகின்றன. பணத்தேவையில் உழலும் மக்கள் இவ்வாறான திட்டங்கள் தம்மை இலகுவில் பணக்காரர் ஆக்கி விடும், தனது தேவைகளை நிவர்த்தி செய்யும் என நம்பி இணைகிறார்கள். பின்னர் தன் நெருங்கிய வட்டாரத்துக்கும் இதனை அறிமுகம் செய்கிறார்கள். சில தந்திர விளம்பரதாரிகள் அங்கத்தவர் சார்பாக முதலீடு செய்து பின்னர் அதனை வசூலிக்கிறார்கள்.

பெரும்பாலும் இவர்கள் உலகத்தரத்திலான சில நிறுவனங்கள், விற்பனைத் தளங்களின் பெயர்களை பயன்படுத்தி மக்களை கவர்ந்து தங்கள் திட்டங்களின்பால் திசை திருப்பி இலாபமடைகின்றனர். கவர்ச்சிகரமான அனுகூலங்களை கொண்டதாக காட்டப்படும் இத்திட்டங்கள் ஒரு சந்தர்ப்பத்தில் சரிவை சந்திக்க ஆரம்பிக்கும் அப்போது மேல்நிலையில் உள்ளவர்கள் இலாபம் பார்க்க புதிதாக இணைந்தவர்கள் பணத்தை இழந்து தவிப்பர். இலங்கை போன்ற மக்கள் தொகை கொண்ட நாட்டில் பிரமிட் திட்டங்களின் ஆயுள் காலம் குறைவாகும். குறிப்பிட்டளவு அங்கத்தவர்கள் இணைந்த பின் இதன் வளர்ச்சி மட்டுப்படுத்தப்படும். திட்டம் சரிவடைந்து பெரும்பாலானோர் முதலீட்டுப் பணத்தையும் இழப்பர். இவ்வாறான திட்டங்களில் எந்தவொரு புது நிதியும் உருவாக்கப்படுவதில்லை. இணைபவர் செலுத்தும் கட்டணமே சுழற்சியில் இன்னொருவருக்கு வருமானம் ஆகின்றது. இதன்போது முதலில் இணைந்தவர் பெருமளவில் இலாபமடைகின்றனர். பிரமிட்டின் கீழ்நிலை முதலீட்டாளர்கள் முதலீட்டை இழக்கிறார்கள்.

சமூகத்தில் ஏற்கனவே இது பற்றிய விழிப்புணர்வுகள் இருந்தும் மீண்டும் மீண்டும் இவ்வகை திட்டங்கள் தோன்ற சில காரணங்கள் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் அப்பாவிகளாக தன்னைத்தானே குற்றவாளியாக்கிக்கொண்டு தான் ஏமாந்து விட்டோம் என வெளியே சொல்ல வெட்கப்பட்டு அமைதியாக இருந்து விடுகின்றனர். ஆனாலும் சில இம்முறைகளில், கீழ்நிலை அங்கத்தவர்கள் ஒருவர் வெளியேற இன்னொருவர் இணைதல் என பதிலீடு செய்யப்பட்டுக்கொண்டே இருப்பர்.

பெரும்பாலும் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பவர்கள் சமூகத்தில் அங்கீகாரம் பெற்றவர்களின் துணையுடன் இவற்றை முன்னெடுக்கின்றனர். இவ்வகை மோசடியில் ஈடுபடுபவர்கள் அதிகளவில் அங்கத்தவர்களை சேர்ப்பதை மட்டுமே நோக்கமாக கொண்டு இலாபம் ஈட்டுகின்றனர். இவர்கள் புதுப்புது திட்டங்களையும் யுக்திகளையும் கையாண்டு இவற்றின் உண்மைத் தன்மையை இலகுவில் உணர முடியாதபடி சிக்கல் தன்மையை உண்டாக்குகின்றனர். இவ்வாறான திட்டங்களில் இணையும் பொதுவாக 90 - 99 வீதமான மக்கள் முதலீட்டை இழக்கின்றனர். இணையும் குழு அயலவர்களையும் உறவினர் நண்பர்களையும் கொண்டதாகவே அமையும். திட்டம் சரியும்போது இவர்களுக்குள்ளே நம்பிக்கை குறைந்து தர்க்கம் ஆரம்பிக்கின்றது. இவை பல குடும்பங்களில் அமைதியின்மையையும் சிலவேளைகளில் தற்கொலைகளையும் ஏற்படுத்துகின்றன.

பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாதவர்களே அதிகமாக இவற்றில் இணைகின்றனர். முதலீட்டுப் பணமும் அனேகமாக கடனாகவே அமைகின்றது. இவர்கள் முதலீடு இழக்கும்போது கடன் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்படுவர். முதலீடு வெளிநாட்டு நாணயங்களில் செலுத்தப்படுமெனில் இவை பெரிய அளவில் இடம்பெறும்போது நாணய மாற்று விகிதத்தில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்துவதோடு நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பிலும் பிரச்சினையை ஏற்படுத்தும். பிரமிட் திட்டங்கள் மக்களின் சேமிப்பை சுரண்டி தனது முதலீடாக உள்வாங்கிக் கொள்கின்றன. அத்துடன் நேரம் மற்றும் மனித வள விரயத்தையும் உண்டாக்குகின்றன. சிறு முதலீட்டில் அதிகம் சம்பாதிக்கலாம் என வருபவர்களிடம் அவதானமாக இருக்கவும், அவர்கள் பெரும்பாலும் தான் அறிந்ததை கூறாமல் நயவஞ்சகமாக மயக்கி திட்டத்தில் இணைத்து விடுவதை நோக்கமாக கொண்டவர்கள். இறுதியில் பண இழப்பு மட்டுமன்றி சட்டத்தின் முன் குற்றவாளியாகவும் இருக்க நேரிடும். சந்தை விலைக்கு முரணான விலையில் பொருள் விற்பனை, சலுகைகள், புதிய விற்பனையாளரை இணைப்பதற்கு வெகுமதிகள் என காட்டப்படும் திட்டங்களில் இணைய வேண்டாம். கீழ்நிலை எண்ணிக்கை அதிகரிக்க உங்கள் முதலீடு பலமடங்காகும் எனக் கோரும், வர்த்தக வாய்ப்பு, பகுதி நேர வேலைவாய்ப்பில் பல ஆயிரங்களில் வருமானம், இல்லத்தரசிகளுக்கான அரிய வாய்ப்பு போன்ற பதாகைகளைக் கொண்ட திட்டங்களில் இணைய முன் மிகுந்த விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று 'உலக புகைத்தல் தடுப்பு தினம்'

# புகையிலையில் இருந்து விடுபடுவதற்கான நேரமிது!



இந்த முறை உலக சுகாதார ஸ்தாபனம், உலக புகைத்தல் தடுப்பு தினத்தின் தொனிப்பொருளாக 'எமக்குத் தேவையானது உணவு, புகையிலை இல்லை' என்று பெயரிட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் புகையிலை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பயிர்ச்செய்கையாளர்களின் அவதானத்தை மாற்றுவழி உப பயிர்ச்செய்கையின் மீது செலுத்தி அவற்றை ஊக்குவிப்பதை இலக்காக இந்தத் தொனிப் பொருள் கொண்டுள்ளது.

இலங்கையர்கள் நாளாந்தம் 400 மில்லியன் ரூபாவை சிகரெட்டுக்காகச் செலவிடுகின்றனர். சிகரெட் பாவனை காரணமாக அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சுகாதாரச் செலவுகள் 84 ஆயிரத்து 320 மில்லியன் ரூபாவாகும். புகைத்தல் பாவனையில் ஈடுபடும் அதிகமானோர் குறைவருமானம் ஈட்டுகின்ற குழுவினர் என்பது ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இது குடும்பங்களின் உணவுப் பாதுகாப்புக்குத் தடையாக இருக்கின்றது. விரைவாக உயர்ந்து செல்லும் உணவு விலைகளுடன் நாட்டு மக்கள் மிகவும் பொருளாதார இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி 6.3 மில்லியன் இலங்கையர்கள் உணவுப் பாதுகாப்பின்மையை அண்மித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் சிரமப்பட்டுச் சம்பாதிக்கின்ற பணத்தை வீணாக புகைப் பிடித்தலுக்காகச் செலவிடுவதால் அவர்களின் குடும்பங்கள் மேலும் படுகுழியில் தள்ளப்படுகின்றன. தற்போது குடும்பங்களுக்கு உணவு தேவையே தவிர, புகையிலை இல்லை என்பதால் புகைபொருள் பாவனையிலிருந்து விடுபடுவதன் மூலம் உணவுப் பிரச்சினையிலிருந்து மீள்வதற்கு வழியேற்படுத்திக்கொள்ள முடியும். சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, புகைப்பொருள் பாவனையால் இலங்கையில் வருடாந்தம் சுமார் 20 ஆயிரம் பேர்வரை இறக்கின்றனர். எமது நாட்டில் நாளாந்தம் 55 பேர் இறப்பதற்கு புகைத்தல் பாவனை காரணமாகியுள்ளது. அதேநேரம், புகையிலை பயிர்ச்செய்கையானது சூழல் மாசடைவதற்கான பிரதான காரணியாக அமைவதுடன், புகையிலை பயிர்ச்செய்கை மூலம் ஏற்படும் பாதிப்புகளான கடுமையான மண்ணரிப்பு, மண்வளம் குன்றுதல் மற்றும் நீர்வளம் குறைதல் ஆகியவை காரணமாக நிலத்தின் உற்பத்தித் திறனைக் குறைத்து அதிக இரசாயன உரப் பாவனை முழு சூழல் வலையமைப்புக்கும், பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த இரசாயனப் பொருள்கள் விவசாயிகள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் சுகாதார நிலைமைகளின்மீது பாரிய பாதிப்புக்களை தோற்றுவிக்கின்றன.

புகையிலை கைத்தொழிற்றுறை பல்வேறு உபாயத்திட்டங்கள் ஊடாக கொள்கை வகுப்பாளர்களிடம் நெருங்கி, கொள்கைத் தீர்மானங்களைப் பலவீனப்படுத்துவதற்கும், புகையிலை பயிர்ச்செய்கையை முன்கொண்டு சென்று புகையிலை உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் தொடர்ச்சியாக இயங்குவது வெளிப்படையாகும். புகையிலைக் கைத்தொழில் விவசாயிகளின் வாழ்வாதார வழிமுறையாக அமைந்துள்ளது என்று அடிக்கடி தங்களைப்பற்றி புகழ் பேசிவந்தபோதும், ஒருபோதும் அவை உண்மையான அல்ல. புகையிலை பயிர்ச்செய்கை நிலைபேறானதொரு பயிர்ச்செய்கை என்று காண்பிப்பதற்காக புகையிலை தொழிற்றுறை மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப்போனது.

சிகரெட் பாவனை மற்றும் அதனுடன் இணைந்த பாதிப்புகளைக் குறைப்பதற்கான கட்டுப்பாட்டுக் கொள்கைகள் இப்பொழுது எமது நாட்டுக்குத் தேவையாகும். கலால் வரியை அதிகரிப்பதன் மூலம் சிகரெட் உற்பத்திப் பொருள்களின் விலைகளை அதியுச்ச அளவில் அதிகரிப்பதானது புகையிலை கட்டுப்பாட்டுக்காகவேண்டி எடுக்கவேண்டிய மிகவும் பயனுள்ள உபாயத்திட்ட வழிமுறையாகும் என்று இனங்காணப்பட்டுள்ளது. எனினும், தற்பொழுது இலங்கையில் கலால் வரி நாட்டின் பணவீக்கத்துடன் இணைந்ததாக தயாரிக்கப்பட்டுள்ள விஞ்ஞானபூர்வமான விலைச்சுட்டி நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக எமது நாட்டில் கலால் வரி மற்றும் அதில் தொடர்ச்சியாக ஒப்பீட்டளவில் தீர்மானிக்கப்படுகின்ற சிக்கலான, பின்தங்கிய முறைமைகளாகும்.

நிதி அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற முறைகேடான செல்வாக்குகள் காரணமாக நாட்டினுள் விஞ்ஞானபூர்வமான மற்றும் தர்க்கரீதியான சிகரெட் வரிக் கொள்கையொன்றை அமைப்பது தாமதமாகியுள்ளது. இந்த நிலைமையின்கீழ் கடந்த 5 வருடங்களில் அரசாங்கம் இழந்த வரி வருமானம் அண்ணளவாக 200 மில்லியன் ரூபாவாகும்.

புகையிலை பயிர்ச்செய்கையிலிருந்து விடுபட்டு விவசாயிகள் பயனுள்ள வாழ்வாதார வழிமுறைகளில் ஈடுபடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் விரைவுபடுத்துவதற்கான காலம் எழுந்துள்ளது. இலங்கைக்குள் புகையிலைப் பாதிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து, விவசாயத்தை தொடர்ந்தும் முன்னேற்றி, போசாக்கான நிலைபேறான பயிர்ச்செய்கைகளின்மீது கவனத்தை செலுத்தி, இறக்குமதி உற்பத்திகள்மீது தங்கியிருக்காமல் தன்னிறைவான எதிர்காலத்திற்காகவேண்டி, ஒன்றிணைய வேண்டும் என்று பொறுப்புக்கூறுகின்ற தரப்பினர்களிடமும், சகல பிரஜைகளிடமும் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் கேட்டுக்கொள்கின்றது.

# செந்தமிழ் வில்லிசைக் குழுவின் அரங்கேற்றம்

தமிழ்த்தாதா

தமிழர்களின் தொன்மைக்கலைகளுள் ஒன்றாகப் போற்றப்படுவது வில்லிசை. இயல், இசை, நாடகம் என அனைத்தும் ஒருசேர வெளிப்படும் கலையாக இது திகழ்கின்றது. கிராமிய மக்களின் கலையாகவே இது இன்றும் நோக்கப்படுகின்றது. இராமாயணம், பாரதம், சிலம்பு எனப் பல்வேறு இலக்கியப் பாத்திரங்கள் பாமர மக்கள் மத்தியில் புழக்கமுறுவதற்கு வில்லிசைக் கலை கணிசமான பங்கை வகித்துள்ளது. ஈழ விடுதலைப் போராட்டம் சார் எழுச்சிக்காகப் போராளிகளும் இக்கலையை முதன்மையாகப் பயன்படுத்தியிருந்தனர் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.



ஈழத்தில் வில்லிசைக் கலையை வளர்ச்சிப்பாதையில் கொண்டு சென்ற பலர் உள்ளனர். திருப்பூங்குடி (புங்குடுதீவு) ஆறுமுகம், சோக்கல்லோ சண்முகம், லடிஸ் வீரமணி, நாச்சிமார் கோவிலடி ராஜன், வானம்பாடி யோகராஜன் எனப்பலர் இலங்கையின் வில்லிசைக் கலை வளர்ச்சிக்காகப் பங்களிப்புச் செய்துள்ளனர். ஈழநல்லூர் சிறீதேவி ஐயர், சிறுப்பிட்டி சத்தியதாஸ், அளவெட்டி மதியழகன், புலவர் இராசையா சிறீதரன் என்ற வரிசையில் பலர் தற்போது வில்லிசைக் கலையில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர்.

ஆயினும் வில்லிசை என்றால் சின்னமணி கணபதிப்பிள்ளை என்ற நாமமே பலராலும் உச்சரிக்கப்படுகிறது. சின்னமணி கணபதிப்பிள்ளையால் மாத்திரமே தமது வாழ்வாதாரத்துக்கான முழுநேரத் தொழிலாகவும் அதேவேளை ஆற்றுகைக் கலையாகவும் வில்லிசையைக் கொள்ளமுடிந்தது. ஆரம்பத்தில் ஆசிரியராகப் பணிசெய்த அவர் இந்தத் துறையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திப் பெருவெற்றி கண்டார்.

வில்லிசைப் புலவர் சின்னமணியின் பாசறையில் 20 வருடங்கள் ஹார்மோனியக் கலைஞராகப் பயணித்தவர் ஈழத்தின் பிரபல குரலிசையாளர் விரிவுரையாளர் தவநாதன் றொபேட் சின்னமணி ஐயா வழியில் வில்லிசையை மேற்கொள்ளவல்ல ஆற்றலாளர்களை இந்த மண்ணில் உருவாக்கவேண்டும் என்று அவர் நாடியதன் விளைவாக யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரும் பிரபல மிருதங்கக் கலைஞருமாகிய சி.செந்தூரன் தனது மாணவன் ஒருவனைப் பத்தாண்டுகளுக்கு மேலாகத் தயார்ப்படுத்தி றெபேட்டின் உதவியோடு தற்போது அரங்குக்கு அழைத்து வந்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் தேசியமட்டத்தில் வில்லிசைக்கான தங்கப்பதக்கம் பெற்ற வில்லிசைக் குழுவின் தலைவர் நி.மோகனதர்சன் (விற்குரு) அதே கல்லூரியில் பயின்று 2019ஆம் ஆண்டு கல்லூரியின் வில்லிசைக் குழுவில் இடம்பெற்ற பே.பிரசன்னா (பக்கப்பாட்டு கலைஞர்) யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவனும் கொக்குவில் இந்துவின் பழைய மாணவனுமாகிய மு.சுலக்சன் (விற்கடக் கலைஞர்) ஆகியோரை இணங்கண்டு ஒருகுழுவாக உருவாக்கி செந்தமிழ் வில்லிசைக் குழு எனப் பெயர் சூட்டி கடந்த 21ஆம் திகதி அன்று மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அரங்கேற்றமும் காண வைத்தார்.

யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் தலைமையில் இடம்பெற்ற இந்த அரங்கேற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் முதன்மை விருந்தினராகவும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வி.எஸ்.பி.துசிதரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண பிதா என்.ஜே. ஞானப்பொன்ராஜா ஆசியுரை வழங்கினார். வடக்கு மாகாண அழகியல் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா மதிப்பீட்டுரை ஆற்றினார். சென். ஜோன்ஸ் கல்லூரியின் இருநூறாவது ஆண்டுப் பெருமையுடன் இடம்பெற்ற அரங்கேற்றம் என்பதால் விருந்தினர்களும் சென்.ஜோன்ஸ் பழைய மாணவர்களாக அமைந்திருந்தனர். செந்தமிழ் வில்லிசைக் குழுவினரின் முதலாவது அரங்கேற்றம் அமரர் சின்னமணி கணபதிப்பிள்ளைக்கு சமர்ப்பணமாக மேற்கொள்ளப்பட்டது.

சிலப்பதிகாரத்தை மையப்படுத்தி கண்ணகியின் கதையை வில்லிசையாக ஆற்றுகை செய்தனர். ஆற்றுகையின் பெரும்பங்கு சின்னமணியை ஞாபகப்படுத்துவதாக அவரது பாணியைத் தழுவியதாகவே அமைந்தது. சமகாலத்தில் இளையோரிடையே காணப்படுகின்ற ஒழுக்கத்துக்கு அச்சுறுத்தலான பழக்கவழக்கங்களைக் கிண்டலடித்து இந்த இளைஞர்கள் கண்டித்தனர். ஒரு மணி நேர நிகழ்ச்சியில் நகைச்சுவைக்குப் பஞ்சமிருக்கவில்லை. காதல், வீரம், கோபம், அழுகை எனப் பல்வேறு சுவைகளையும் குழைத்துக் கதையை வழங்கினர். றொபேட்டின் ஹார்மோனியமும் செந்தூரனின் மிருதங்கமும் வில்லிசைக்கு அணி சேர்த்து வெற்றியின் சிகரத்துக்கு இட்டுச் சென்றன.

நடிகர் சிவாஜி கணேசனின் முதற்படம் பராசக்தி. அது அவருக்கு பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தது. அந்தப் படத்தில் நடித்த சிவாஜியின் நடிப்புப் பற்றி பின்னாளில் கருத்துரைத்த நடிகர் கமல்ஹாசன் தனது முதற்படத்திலேயே நூறாவது படத்துக்குரிய முதிர்ச்சியை நடிகர் சிவாஜி வெளிப்படுத்திவிட்டார் என்று குறிப்பிடுகின்றார்.

இந்தக் கூற்றையே மோகனதர்சன் குழுவினருடனும் பொருத்திப் பார்க்கத் தோன்றுகின்றது. இளையோர்கள் தொன்மையைப் பேணுவதில் நாட்டமுறுகிறார்களில்லையே என ஏக்கமுறும் இன்றைய நிலையில் தமது தொழில்சார் கலையாக வில்லிசைத்துறையில் பயணிக்க முன்வந்துள்ள இந்த இளையோரை எமது சமூகம் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 10 (பழைய வட்டாரம் 21) அராலி வீதி, ஆதன இலக்கங்கள் 32, 34 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியபட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை பத்மநாதன் இராஜேஸ்வரி அவர்கள் 25.07.2012ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எஸ்.கங்காதரன் முகதாவில் 11654ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் நெற்பரப்பு 14 குளி 1.83 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை முப்பது வருட அசைவற்ற இடையூறற்ற ஆட்சியென வெளிப்படுத்தி வெளிப் படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை பத்மநாதன் இராஜேஸ்வரி அவர்கள் 25.07.2012ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எஸ்.கங்காதரன் முகதாவில் 11655ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நெற்பரப்பு 14 குளி 1.83 விஸ்தீரண ஆதனத்தை தனது மகனான பத்மநாதன் சிறிராம்குமாரிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "துரும்பாகுலம் கரை வயல்" நெற்பரப்பு 14 குளி 1.83. இதனெல்லைகள்,

கிழக்கு : எஸ்.தர்மராஜாவுக்கும், கே.இரர்சநாயகத்திற்கும் உரிய ஆதனம்.

வடக்கு : P.சுமதியினதும் மறுபேரினதும் ஆதனம்.

மேற்கு : ஒழுங்கை

தெற்கு : அராலி வீதி.

தற்போது பத்மநாதன் சிறிராம்குமார் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பத்மநாதன் சிறிராம்குமார் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR.39935) (N-1)



## அருள்மிகு திரியாய் அம்பாள் (பர்வதவர்த்தினி) தேவஸ்தான

# திருக்குளிர்த்திப் பொங்கல் விழா

## 02.06.2023 வெள்ளிக்கிழமை

**பொங்கல் விழாவானது காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் காலை 5.00 மணிக்கு நிறைவடையும் என்பதனை பக்த அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.**

❖ **ஆலயத்தின் வளர்ச்சி கருதி அர்ச்சனைப் பொருள்கள் பரிபாலன சபையினரால் விற்பனை செய்யப்படும்.**

❖ **வழமைபோன்று பொங்கல்விழா இரவு பகலாக நடைபெறும்.**

**குறிப்பு:**

❖ அன்றைய நாள் பாதுகாப்பு, சுகாதாரம் பேணல், குடிநீர் வசதி போன்றவைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் திருப்திகரமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

❖ விசேட போக்குவரத்து ஒழுங்கு வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி தனியார் போக்குவரத்து சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

❖ உணவுப் பண்ட வியாபாரத்தில் ஈடுபடுவோர் சுகாதார பணிமனையின் அனுமதி பெற்றுவருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் (Icecream வான், ஏனைய)

❖ இரவு பகல் அன்னதானமும் தாகசாந்தியும் நடைபெறும்.

❖ வியாபாரத்தில் ஈடுபடுவர்கள் தொடர்புகொள்ளவேண்டிய இலக்கம்:

**077 555 2123, 077 347 4011, 077 921 8830**

**ஆலய பரிபாலனசபை**
**முகாவில், இயக்கச்சி.**

# மரண அறிவித்தல்

# ஆழ்வான் சந்திரநாதன் (சந்திரன்)


**(ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர் - அச்சுவேலி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)**

ஆவரங்கால் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட ஆழ்வான் சந்திரநாதன் (சந்திரன்) கடந்த (29.05.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வான் வைரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகன் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், பேபியின் பாசமிகு கணவரும், கேமலோசன் (பிரான்ஸ்), கேமதாசன் (பிரான்ஸ்), கேமினா, கேமபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியதர்ஷினி (பிரான்ஸ்), ருஸ்தா (பிரான்ஸ்), தனஞ்சயன் (கனடா), அனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விதுன், விதுனா, கியாஸ், அஸ்மிதா, ரியானி, ஸ்ரெபானா, விதுர்ஷிகா, அன்றியா ஆகியோரின் பாசமிகு பேரனும், நாகம்மா, தங்கமலர், ஆயிலியம் ஆகி யோரின் அன்புச் சகோதரனும், தவராஜா, நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



மண்ணில் 20.09.1952 விண்ணில் 29.05.2023

**தகவல்:**
**- குடும்பத்தினர்**

(cs.50626) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை சுப்பர் கிங்ஸ் சம்பியன்!





புதுடில்லி, மே 31

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரை நீடித்த இறுதியாட்டத்தில், குஜராத்தை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்னை சுப்பர் கிங்ஸ். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணியின் தலைவர் டோனி களத்தடுப்பைத் தீர்மானித்தார். ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டால், டக்வேர்த் லூயிஸ் முறைப்படி நிர்ணயிக்கப்படும் இலக்கை விரட்டுவதற்கு முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவது சரியாக அமையும் என்பதால் அவர் இந்த முடிவை எடுத்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணிக்கு ஆரம்ப வீரர் சகா அதிரடி காட்டினார். சுப்மன் கில்லும் வெளுத்துவாங்க குஜராத் அணி 6 ஓவர்களில் 60 ஓட்டங்களை எட்டியது. அணி 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஜடேஜாவின் சுழலில் சிக்கினார் கில். அவர் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் களமிறங்கிய தமிழக வீரர் சாய் சுதர்சன். சென்னை அணிக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். குஜராத்தின் ஓட்டங்கள் எகிறிச் சென்றன. தேஸ்பாண்டே, தீக்சன, பதிரண என்று எவரின் பந்துவீச்சும் சென்னை அணிக்கு பிடிமானத்தை ஏற்படுத்தவில்லை. 96 ஓட்டங்களை வெளுத்துவாங்கி ஆட்டமிழந்தார் சாய் சுதர்சன். அணித்தலைவர் பாண்டியாவின் கடைசிக்கட்ட அதிரடி கைகொடுக்க 4 இலக்குகளை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது குஜராத். 120 பந்துகளில் 215 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் களமிறங்கியது சென்னை. ஆட்டம் மழையால் பாதிக்கப்பட வெந்த புண்ணில் வேல் பாய்ந்ததைப் போன்று சென்னை அணிக்கு 15 ஓவர்களில் 171 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஹெய்க்வாட் மற்றும் கொன்வே இருவரும் இலக்கை எட்டக்கூடிய வகையில் ஆட்டத்தை நகர்த்தினார்கள். 3 ஓவர்களில் 40 ஓட்டங்களைத் தொட்டது சென்னை. நம்பிக்கை துளிர்த்தது. ஆயினும், குஜராத்தின் சுழற்பந்துவீச்சாளர் நூர் துல்லியமான ஓவர்களை வீசி ஆட்டத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டிருந்தார். ஒருபுறம் மழை வந்துவிடுமோ என்ற அச்சம். மறுபுறம் நூரின் துல்லியமான பந்துவீச்சு என இருமுனைப் போராட்டத்துக்குள் தத்தளித்தது சென்னை. ஹெய்க்வாட் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். களமிறங்கப்பட்டார் துபே. ஆரம்பத்தில் துபே தடுமாறினார். சில நிமிடங்களில் கொன்வேயும் வீழ்ந்தார். ரகானே - துபே இணையிடம் சென்னையின் கிண்ணக்கனவு தஞ்சமடைந்தது. ரசிட்கானின் ஓர் ஓவரில் அடுத்தடுத்து இரு சிக்சர்களை விளாசினார் துபே. ரகானேயும் கிளாசிக் ட்ரைவ்களை பஞ்சமில்லாமல் ஆடினார். 27 ஓட்டங்களுடன் ரகானே ஆட்டமிழந்ததும், களமிறங்கினார் ராயிடு. அவரின் பிரியாவிடை ஆட்டமிது. மறக்கமுடியாத வகையில் தரமான சம்பவம் ஒன்றை அரங்கேற்றினார். 8 பந்துகளில் 19 ஓட்டங்களை ராயிடு விளாசி ஆட்டமிழந்தார். களம்கண்ட டோனியோ வந்த முதல் பந்திலேயே பவிலியன் திரும்பினார். இறுதி இரு பந்துகளில் 10 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. அடுத்தடுத்து சிக்சரையும் பவுண்டரியையும் விளாசி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் ஜடேஜா.

அத்துடன் ஐந்தாவது தடவையாக கிண்ணத்தை ஏந்தியது சென்னை சுப்பர் கிங்ஸ். (ம)


## உற்சாகமாய் இருப்போம் நீரிழிவு நோயை தடுப்போம்

## GINSOMIN®




சுறுசுறுப்பான, புத்துணர்வான, பலமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு

Ginsomin இன் பிரதான கூறான அசல் கொரியன் பன்க்ஸ் ஜின்சென் உடலில் இன்சுலின் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு இன்சுலின் எதிர்ப்பு செயற்பாட்டை குறைக்கிறது என்பது மருத்துவ ரீதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலான சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

MEGA We care
For Your Wellness

077 34 100 71
011 43 66 609

YouTube f Ginsomin Srilanka

இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A Baur & Company (Pvt) Limited


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதப்பதற்றத்துக்குப் பின்னணியில் அரசியல் நோக்கம் இருக்கலாம்!

## கொழும்புப் பேராயர் இல்லம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 31

இலங்கையில் சிலர் பதற்றத்தைத் தூண்டும் விதத்தில் வெளியிடும் கருத்துக்களின் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருக்கலாம் என கொழும்புப் பேராயர் இல்ல ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை ஜூட் கிருஸாந்த தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இது வெவ்வேறு வழிகளில் வெளிப்படலாம். உதாரணத்துக்கு ஒருவர் தனது மதத்தைத் தானே கடுமையாக விமர்சிப்பதன் மூலம் அதைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் சீற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்த முயலலாம்.

இதேபோன்று சிலர் வேறு மதங்களை விமர்சிக்கலாம். அந்த மதங்கள் தொடர்பாகப் பாதகமான கருத்துக்களை வெளியிடலாம்.

இதன்மூலம் அந்தமதத்தைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தலாம். பொறுமை கைநழுவி வன்முறை எண்ணங்கள் முதன்மை பெறலாம். அவ்வாறான சூழ்நிலை தோன்றாத வகையில் நாங்கள் எங்கள் எண்ணங்களைப் பாதுகாக்கவேண்டும்.

இவற்றால் பல்வேறு சமூகங்கள் மத்தியில் அச்சம், நம்பிக்கையின்மை, சந்தேகம் என்பன ஏற்படலாம். நாங்கள் எங்கள் சிந்தனைகள் தொடர்பாக எச்சரிக்கையாக இருக்கப் பழகவேண்டும்.

இந்த முயற்சிகளுக்குப் பின்னால் மோசமான அரசியல் நோக்கங்கள் இருக்கலாம். இந்த நாட்டில் இது நிகழ்ந்த மிகமோசமான வரலாறு உள்ளது. எவரும் இந்த நிகழ்ச்சி நிரலுக்குப் பலியாகக் கூடாது - என்றார். (எ-இ)

# இறக்குமதி முட்டைகள் விற்பனைக்கு இல்லை

கொழும்பு, மே 31

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை சில்லறைச் சந்தைக்கு விநியோகிப்பது தொடர்பில் இதுவரை எவ்வித் தீர்மானமும் எடுக்கவில்லை என அரச பல்நோக்கு வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை சில்லறைச் சந்தைக்கு விநியோகிக்கவேண்டும் என்றுபொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

ஆயினும் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் தற்போது ஹோட்டல்கள் மற்றும் பேக்கரிகள் உள்ளிட்ட துறைகளுக்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இருந்து தினமும் ஒரு மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7 மில்லியன் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)



முன்னாள் அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக தபால் தலை ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வெளியிடப்பட்டது. ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சரான பந்துல குணவர்த்தனவால் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறை என்பன ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. (எ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர் பாராத பொருள் வேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்படும். வியாபாரத்தில் விவாதம் செய்வதை தவிர்க்கவும்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும்.

**கன்னி:** அதிகரிக்கும் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். சுபச்செய்தி வரும். சகோதர வகையில் சில சங்கடங்களை எதிர்கொள்ள நேரிடும். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், சிலருக்குக் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். சற்று அலைச்சல் ஏற்படும்.

**மகரம்:** புவழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.



# வலுப்பெறுகின்றது ரூபாவின் பெறுமதி

## மத்திய வங்கி தகவல்

கொழும்பு, மே 31

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 19.8 வீதத்தால் வலுப்பெற்றுள்ளது என இலங்கை மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களுக்கமைய உலகின் சில முக்கியமான நாணய அலகுகளுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியும் உயர்வடைந்துள்ளது.

இந்தாண்டு ஆரம்பம் முதல் இந்த மாதத்தின் 26ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ரூபாவின் பெறுமதி 19.8 வீதத்தால் உயர்ந்துள்ளது.

ஜப்பான் யென்னுக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 26.4 வீதத்தாலும், ஸ்ரேலிங் பவுண்டுக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 17 வீதத்தினாலும், யூரோவுக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 18.9 வீதத்தினாலும், இந்திய ரூபாவுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 19.7 வீதத்தாலும் இலங்கை ரூபா அதிகரித்துள்ளது என மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ஆளுங்கட்சியுடன் ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, மே 31

ஆளும் கட்சியின் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கலந்துரையாடலில் அரசியல் நிலைமைகள். எதிர்காலத் திட்டங்கள் என்பன கலந்துரையாடப்பட்டன என நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். (ச-இ)

# ரஜங்கனய சத்ஹரத்ன தேரரை இயக்கும் திரைமறைவுச் சக்தி

## அனந்த சாகர தேரர் சந்தேகம்

கொழும்பு, மே 31

இனங்களிடையே ஐக்கியமின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட ரஜங்கனய சத்ஹரத்ன தேரரை திரைமறைவுச் சக்திகள் இயக்குகின்றன என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என ரஜங்கனய சத்ஹரத்ன தேரர் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடளித்த பகியங்கல அனந்த சாகர தேரர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இனங்களுக்கிடையில் ஐக்கியமின்மையை ஏற்படுத்தும் வகையில் ரஜங்கனய சத்ஹரத்ன தேரர் சமூக ஊடகங்களில் செயற்பட்டுவந்தார். அண்மைக்காலத்தில் பல தனிநபர்கள் மத நிந்தனையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ரஜங்கனய சத்ஹரத்னதேரர். சமூக ஊடகங்களின் மூலம் ஆபாசமான மொழிப் பிரயோகத்துடன் வெறுப்புணர்வைப் பரப்புகின்றார். சிரேஷ்ட மதகுருமாருக்கு எதிராகவும், மகாநாயக்க தேரர்கள், பெண்கள், சிறுவர்களுக்கு எதிராகவும் இவர் வெறுப்புணர்வுக் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்.

சமூக ஊடகங்களில் அவரின் நடவடிக்கைகள் கண்டிக்கப்பட்டபோதும் அவர் தனது நடவடிக்கைகளைத் திருத்திக்கொள்ள முயலவில்லை. அதனால் அவரின் பின்னால் திரைமறைவு சக்திகள் இருந்து அவரை ஆட்டுவிக்கின்றன என நாங்கள் கருதுகின்றோம். அவரது வங்கிக்கணக்குகளுக்குப் பல பணப்பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்று குற்றம்சாட்டப்படுகின்றது. ஆனால் இதுவரை இது தொடர்பாக எவரும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் போராட்டங்களை நசுக்கும்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஆதங்கம்

வவுனியா, மே 31

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படவுள்ள நிலையில், இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்குத் தெரியாமல் இருக்கின்றது என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமலாக்கப்பட்ட எங்களின் உறவுகளுக்காக, ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி சர்வதேச நீதியைக்கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். இவ்வாறிருக்கையில், அரசாங்கம், பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை நீக்குவதாகத் தெரிவித்துவிட்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அந்தச் சட்டம் கொண்டுவரப்படுமானால், எங்களின் ஜனநாயகப் போராட்டத்துக்கான சுதந்திரம் இல்லாமல் செய்யப்படும். எனவே அதை அனைவரும் எதிர்க்கவேண்டும் என்று ஒருமித்த குரலில் வலியுறுத்துகின்றோம்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்காக நாம் நடத்துகின்ற போராட்டத்துக்கு சர்வதேசத்தால் நீதி வழங்கப்பட்டாகவில்லை. சர்வதேசம் ஏன் எங்களின் பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருக்கின்றது? இம்முறை நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரிலாவது எங்களுக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும் - என்றனர். (அ-ம-110)

# வீதி விபத்தைத் தடுக்க யாழில் சிறப்புத் திட்டம்

## பொலிஸார் அறிவிப்பு

வீதி விபத்துகளைத் தடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் இன்றுமுதல் சிறப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுளசெனரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் மே மாதம் மாத்திரம் 10க்கும் மேற்பட்ட பெரிய வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. 10க்கும் மேற்பட்டோர் இவற்றில் உயிரிழந்துள்ளனர். எனவே, விபத்துக்களைத் தடுக்க நாளை (இன்று) முதல் சிறப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் தொடர்பில் இறுக்கமாகக் கண்காணிக்கப்படும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 80 வீதமானவர்கள் போக்குவரத்து விதிமுறைகளை மீறியே பயணிக்கின்றனர். தலைக்கவசம் அணியாது செல்கின்றனர். வேகமாக வாகனங்களைச் செலுத்துகின்றனர். முறையற்ற விதத்தில் வாகனங்களை நிறுத்தி வைத்திருக்கின்றனர். இவ்வாறான குற்றங்கள் நாளைமுதல் இறுக்கமாகக் கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்குப் பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

## இன, மத...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் கற்றுக்கொடுத்த பாடத்துக்கமைய தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவதானத்துடன்செயற்படும். மதநல்லிணக்கத்தைச்சீர்குலைத்து இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தி, நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லும் வகையில் சில குழுக்கள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன என்று ஜனாதிபதிக்குக் கிடைத்த தகவலுக்கு அமையவே, அவ்வாறானவர்களை அறிவதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் மத்தியில் கோபத்தைத் தூண்டும் வகையில் சில குழுக்கள் மிகவும் சூட்சுமமாகச் செயற்பட்டு வருவதாக பாதுகாப்புச் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. புலனாய்வுத் துறை இதுதொடர்பான தகவல்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளது. இது தொடர்பில் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற ரீதியில் முழுமையாக அவதானம் செலுத்தியுள்ளோம். அதற்கமைய உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாதுகாப்புத் துறையினருக்கும், உரிய அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். மத மற்றும் இன ரீதியான முரண்பாடுகளை நீண்டகாலம் எதிர்கொண்டு, குண்டுகள் வெடிக்கும் சத்தங்களுக்கு மத்தியில் நாம் வாழ்ந்திருக்கின்றோம். இனி அவ்வாறான அசம்பாவிதங்கள் நாட்டில் ஏற்படக்கூடாது என்பதில் உறுதியாகவுள்ளோம் - என்றார். (அ-ம)

## 8 ஆண்டுகளின்...

குற்றச்சாட்டுப் பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட நெல்சிப் திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டு 2015ஆம் ஆண்டு ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் அப்போதைய வடக்கு மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதனாலும், அப்போதைய ஆளுநராலும் விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கைகள் 2018ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டிருந்தன.

விசாரணை அறிக்கைகள் நிர்வாக அதிகாரிகளின் நியமன அதிகாரியான உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் தற்போது குற்றப்பத்திரம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக வடக்கு மாகாண பிரதமசெயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டுள்ளது.

அப்போதைய யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் அப்போதைய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரமே தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சிலிருந்து நேரடியாக இருவருக்கும் 'முற்கூட்டிய' தகவலாக ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வடக்கு மாகாண பிரதம செயலர் ஊடாக அப்போதைய உள்ளூராட்சி ஆணையாளராக இருந்தவருக்கு மாத்திரமே நேற்றையதினம் உத்தியோகபூர்வமாக விளக்கம் கோரிய குற்றப்பத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் 14 நாள்களுக்குள் விளக்கமளிக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## வவு. இரட்டைக்...

இரட்டைத் தூக்குத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி வவுனியா - சமளங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்து இருவரை சுட்டுக்கொலை செய்துவிட்டு நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் மீது வவுனியா நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்று மேல் நீதிமன்றுக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

சந்தேகநபர் மீது கொள்ளை, ஆட்கொலைகள் உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுக்களைக் கொண்ட குற்றப்பத்திரத்தை சட்ட மா அதிபர் தாக்கல் செய்திருந்தார். வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக நியமிக்கப்பட்டது.

'சந்தேகநபருக்கு எதிரான 11 குற்றச்சாட்டுக்களும் தடயவியல் சாட்சிகள், நிபுணத்துவ சாட்சியத்தின் அடிப்படையில் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் வழக்குத் தொடுநரால் நிரூபிக்கப்பட்டுள்ளன. அதனால் அவரைக் குற்றவாளியாக மன்று இனங்கண்டுள்ளது. அத்துமீறல், கொள்ளைஉள்ளிட்டமுதல் 9 குற்றச்சாட்டுக்களுக்கும் எதிரிக்கு 16 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுவதுடன் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த உத்தரவிடப்படுகிறது. தண்டப்பணம் செலுத்தாவிடின் இரண்டு மாத கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

இருவரைக் கொலை செய்த குற்றங்களுக்காக இரண்டை தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. ஜனாதிபதி தீர்மானிக்கும் தினத்தில் - இடத்தில் சந்தேகநபர், உயிர் உடலிலிருந்து பிரியும் வரை தூக்கிலிடப்படுவார்' என்று மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார். (அ-ம-110,18,26)

## எரிபொருள்...

நிலையங்களில் நேற்றையதினம் வரிசையைக் காணக்கூடியதாக இருந்தது.

எரிபொருள்களின் விலைச்சூத்திரம் விரைவில் மாற்றப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. இவ்வாறு விலை குறைக்கப்பட்டால் இழப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதால், விற்பனை முகவர்கள் எரிபொருள்களுக்கான கொள்வனவுக் கோரிக்கையை விடுக்கவில்லை. இதனால், எரிபொருள்களுக்கு செயற்கையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இந்தத் தட்டுப்பாடு பெரிதானது இல்லை என்றும் ஓரிரு தினங்களுக்குள் அதுவாகவே சீராகிவிடும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-ம)

## எரிபொருள் விலை...

குறைவடைந்துள்ளமையால், எரிபொருளில் விலைகளில் வீழ்ச்சி ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது.

சராசரியாக 75.71 டொலராக இருந்த ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 71.48 டொலராகக் குறைந்துள்ளது.

ஒப்பீட்டளவில் பல்வேறு நிறுவனங்களினதும் கச்சா எண்ணெய் சுமார் 2 வீதம் குறைந்துள்ளதால், உலக அளவில் இலங்கையிலும் எரிபொருள்களின் விலையில் மாற்றமொன்று ஏற்படலாம் என்று வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

## இரத்த...

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் டெனிஸ்டன் (வயது -22) என்ற நபரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவர் கசிப்பு அருந்திவிட்டு வந்தபோதே இரத்த வாந்தி எடுத்தார் என்றும், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## இன, மதவாதங்களுக்கு...

ஆதங்கத்தை வெளியிட்டார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனக்குத் தெரிந்த காலத்தில் இருந்தே நாட்டில் இனவாத, மதவாதப் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும்? பௌத்த மதத்தைப் பாதுகாக்க வேண்டுமென அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, ஏனைய மதத்தவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்த மதத்தை திட்டமிட்டு அவமதிக்கிறார்கள். இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. நாடாளுமன்றத்தில் கூட பேசுகிறார்கள். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவர் என்னைத் தூக்கிலிட வேண்டுமென்கிறார். மத நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலிஸ் பிரிவை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இதுவொரு நல்ல விடயம் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவாதத்தைத் தூண்டினால் கடுமையான சட்டம் பாயும்!

## பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

**கொழும்பு, மே 31**

**மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மதவாத உணர்வுகளைத் தூண்டு வதற்கு இடமளிக்கமுடியாது என்று பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். இந்த முக்கியமான தருணத்தில் நாட்டில் மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்படுவதற்கான தெளிவான அறிகுறிகளைக் காணக்கூடியதாகவுள்ளது.

நாட்டில் மதப்பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு நிலவும் அமைதியான சூழ்நிலையை சீர்குலைக்க பல தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

தனிநபர் ஒருவரோ அல்லது குழுவினரோ மதவாத உணர்வுகளைத் தூண்டுவதற்கு அல்லது அதே நோக்கத்துடன் செயற்பட முயற்சித்தால் அவர்களுக்கெதிராக தண்டனைச் சட்டம் பாயும் - என்றார். (ச-44)

## காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு!

வவுனியா, மே 31

வவுனியா - மதவாச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில், காட்டுயானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். டி.ஜயவர்தன (வயது -73) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வயலில் தங்கிநின்று காவல் பணிகளில் ஈடுபட்டுவிட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே அவர் காட்டு யானையால் தாக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. குறித்த பகுதியில் காட்டு யானைகளின் தாக்கம் அதிகரித்துள்ளது என்றும், யானைகளால் தமக்கு ஏற்படும் அசௌகரியங்களில் இருந்து நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-110)


**Room வாடகைக்கு**

யாழ். மருதனார்மடம் சந்திக்கு அருகாமையில் Room வாடகைக்கு உண்டு. (பெண்களுக்கு மட்டும்).

077 9574 580


# சண்டிலிப்பாயில் பாரம்பரிய உணவு விழா



யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பாரம்பரிய உணவுத் திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

சிறுமுயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் வகையிலும், நவீனயுகத்தில் இளையோரிடையே ஏற்பட்டுள்ள விரைவு உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றி பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கத்தை ஏற்படுத்தும் முகமாகவும் இந்த உணவுத் திருவிழா நடத்தப்பட்டது.

சிறு முயற்சியாளர்களின் பாரம்பரிய உணவுகளான அப்பம், ஒடியல் கூழ், குரக்கன் பிட்டு, பலகார வகைகள், பழங்கள், இளநீர், தானிய உணவுகள், நுங்கு, பழச்சாறுகள், எண்ணெய் வகைகள் உள்ளிட்ட பல வகையான உணவுகள் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் இடம்பெற்றது.

உணவுத் திருவிழாவில் உதவிப் பிரதேச செயலர் செல்வகுமாரி நேசகுமார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச)


**கட்டடம் வாடகைக்கு**

வைத்திய சேவை செய்வதற்கு கட்டடத் தொகுதி வாடகைக்கு விடப்படும். (CS/50596)AH-1

076 904 4235

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

தொடர்பு: 076 733 6047, 076 7558 606

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இளவாலையில் 30 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

* இளவாலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* இளவாலை சந்தியில் இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* ஒரு பரப்பின் விலை : எட்டு லட்சம் ரூபாய் (800,000/=)

தொடர்பு: 076 911 9371, 076 165 3129

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி கரந்தன் சந்தியில் இருந்து மேற்குத் திசையில் 1.3 Km அருகாமையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் ஏற்ற காணிப்பரப்பு.

தொடர்பு: 077 580 3931, 077 958 6955 (cs 50623) (AH-1)

**மணமகள் தேவை**

01. கந்தர்மடம் - மானிப்பாய். இந்து கௌரவகுலம் (V) உத்தராடம். 1989. Masters Science in Biochemistry (Canada) கனடா. Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.பதிவெண் - 34257
02. உடுப்பிட்டி - கரணவாய். இந்து கௌரவகுலம் (V) அவிட்டம். 1990. BSc Engineering (Newzealand), Newzealand Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.பதிவெண் - 34184
03. மாவிட்டபுரம் - இந்து கௌரவகுலம் (V) விசாகம். 1984. Electrical Engineer Singapore Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33732
04. சுருவில் - வண்ணார்பண்ணை, இந்து கௌரவகுலம் (V) அச்சுவினி. 1987. BSc (Moratuwa), MSc (Australia), Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33541
05. திருநெல்வேலி - இந்து கௌரவகுலம் (V) ரேவதி. 1985. Network Administration, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33507
06. கொடிகாமம் - Jaffna Town, இந்து கௌரவகுலம் (V) ஆயிலியம். 1980. Lowyer, Australia Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32385
07. மானிப்பாய் - இந்து கௌரவகுலம் (V) உத்தரம். 1974. Business Management (UK), Uk Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32102

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

**பணிநிலை வெற்றிடம்**

* சாரதி

கனரக வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள்.

* விற்பனை உதவியாளர்

மேற்குறித்த பணிநிலைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.

இல.74, ராஜா பிளாசா பலாலிவீதி, கோண்டாவில். (CS50613) AH-1

**பணியாளர்கள் தேவை**

* **விற்பனைப் பிரதிநிதி**

முன்னனுபவம் உள்ளவர்கள்

வேதனம் - 80,000 - 100,000 வரை பெறலாம்

* **Operational Manager / Supervisor (Part time)**

முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

* **Accounting Clerk (Part time / Work From home)**

Quick Book or Any Account Package தெரிந்திருத்தல் அவசியம்.

மேற்குறித்த பணிநிலைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் kingstower2021@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரத்தை (CV) அனுப்பிவைக்கவும்.

இல.74, ராஜா பிளாசா, பலாலி வீதி, கோண்டாவில்

(CS 50612) AH-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.